## ளுஹா தொழுகை

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்: ஆதமுடைய மக்களில் ஒவ்வொருவர் மீதும் ஒவ்வொரு நாள் காலையிலும் நலமுடன் இருக்கும் ஒவ்வொரு எலும்பு அல்லது மூட்டிற்குப் பதிலாகவும் ஸதஃகா கொடுப்பது வாஜிபானதாகும். சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் சலாம் சொல்வதும் ஒரு ஸதஃகா, நல்லதை ஏவுவது ஒரு ஸதஃகா, தீமையானவற்றிலிருந்து தடுப்பதும் ஒரு ஸதஃகா, வழியிலிருந்து தீங்கு விளைவிக்கும் ஒன்றை அகற்றுவதும் ஒரு ஸதஃகா, தன்னுடைய மனைவியின் வாயில் ஒரு பருக்கையை ஊட்டுவதும் ஒரு ஸதஃகா. ளுஹா நேரத்தில் நிறைவேற்றும் இரண்டு ரகஅத்துக்கள் இந்தச் செயல்கள் அனைத்திற்கும் ஈடானதாக ஆகி விடுகின்றது (அபூ தாவூத்). ளுஹா நேரம் சூரிய உதயத்திற்குப்பிறகு பத்து நிமிடங்கள் கடந்தபின் துவங்கி ளுஹ்ர் தொழுகைக்கான பாங்கு சொல்லப்படும் வரை நீடிக்கின்றது. இத்தொழுகை குறைந்தது இரண்டு ரகஅத்துகளாகவும் அதிமாக எட்டு ரகஅத்துகளாகவும் நிறைவேற்றலாம். இதனை நான்கு ரகஅத்துகளாகவும் ஆறு ரகஅத்துகளாகவும் நிறைவேற்றலாம், அதாவது, இரண்டிரண்டு ரகஅத்துகளாக நிறைவேற்றவேண்டும்.

### இஸ்திக்ஹாரா தொழுகை

இரண்டு அனுமதிக்கப்பட்ட காரியங்களில் எந்த ஒன்றைச் செய்வது சிறந்தது என்ற குழப்பம் ஏற்பட்டு, அதில் ஒரு முடிவு எட்டாமலிருக்கும்போது, ஒரு முஃமின் அல்லாஹ்வின் புறமாக அவனையே நோக்கியவனாகத் திரும்பி அவனிடமே வழிநடத்தும்படி வேண்டுகின்றான். இதற்காக அவன் தொழுகையின் மூலம் அவனிடம் உதவி கோருகின்றான். இந்தத் தொழுகையை ஸலாதுல் இஸ்திக்ஹாரா என்று கூறுகின்றனர். இது சுன்னத்தான தொழுகையாகும், இரண்டு ரகஅத்துகள் நிறைவேற்ற வேண்டும். இதற்கான குறிப்பிட்ட நேரம் ஒன்றும் கிடையாது. இதற்காக இஸ்திக்ஹாரா தொழுகையை நிறைவேற்றியபின் சுன்னத்தான ஒரு துஆ ஓதப்படுகின்றது. ஹஜ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ர) அவர்கள் அறிவிக்கின்றார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் எங்களுக்கு எங்களுடைய கொடுக்கல் வாங்கல்களில் எங்களுக்கு திருக்ஃகுர்ஆன் சொல்லிக்கொடுத்தது போன்றே இஸ்திக்ஹாரா செய்யவேண்டும் என்றும் கற்றுக் கொடுப்பார்கள். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள், நீங்கள் ஒரு செயலைச் செய்ய நினைத்தால் அதற்குமுன் இரண்டு ரகஅத்து நஃபிலான தொழுகையை நிறைவேற்றி அதன்பின் இந்த துஆவை ஓதுங்கள்:

اللَّهُمَّ إِنِّي أَسْتَخِيرُكَ بِعِلْمِكَ وَأَسْتَقْدِرُكَ بِقُدْرَتِكَ، وَأَسْأَلُكَ مِنْ فَضْلِكَ العَظِيمِ، فَإِنَّكَ تَقْدِرُ وَلاَ أَقْدِرُ، وَتَعْلَمُ وَلاَ أَعْلَمُ، وَأَنْتَ عَلَّامُ الغُيُوبِ، اللَّهُمَّ إِنْ كُنْتَ تَعْلَمُ أَنَّ هَذَا الأَمْرَ خَيْرٌ لِي فِي دِينِي وَمَعَاشِي

www.uzairfalahi.com

وَعَاقِبَةِ أَمْرِي – أَوْ قَالَ عَاجِلِ أَمْرِي وَآجِلِهِ – فَاقْدُرْهُ لِي وَيَسِّرْهُ لِي، ثُمَّ بَارِكْ لِي فِيهِ، وَإِنْ كُنْتَ تَعْلَمُ أَنَّ هَذَا الأَمْرَ شَرٌّ لِي فِي دِينِي وَمَعَاشِي وَعَاقِبَةِ أَمْرِي – أَوْ قَالَ فِي عَاجِلِ أَمْرِي وَآجِلِهِ – فَاصْرِفْهُ عَنِّي وَاصْرِفْنِي عَنْهُ، وَاقْدُرْ لِي الخَيْرَ حَيْثُ كَانَ، ثُمَّ أَرْضِنِي

*பொருள்: அல்லாஹ்வே, நான் உன்னிடம் உன்னுடைய பரிபூரண அறிவின் ஆதாரத்தின் அடிப்படையில் நலனை நாடுகின்றேன், உன்னுடைய வல்லமையின் ஆதாரமாக ஆற்றலை நாடுகின்றேன், நான் உன்னிடமிருந்து உன்னுடைய மகத்தான அருளை நாடுகின்றேன். ஏனெனில், நீயே ஆற்றல் மிக்கவன், நான் ஆற்றல் படைத்தவனல்ல, நீ அனைத்தையும் அறிபவன், நான் ஒன்றுமே அறியமாட்டேன், நீயே மறைவானவை அனைத்தையும் அறிபவனாக இருக்கின்றாய். அல்லாஹ்வே, உன்னுடைய பரிபூரண அறிவின் ஆதாரத்தில் என்னுடைய இந்தக் காரியம் என்னுடைய மார்க்கம், என்னுடைய வாழ்வாதாரம் மற்றும் என்றுடைய ஈடேற்றத்திற்காக சிறந்ததாக இருக்குமானால், இதனை எனக்காக விதித்துவிடு, மேலும், இதனை அடைவது எனக்கு எளிதானதாக ஆக்கிவிடு. மேலும், அதில் எனக்காக உன்னுடைய அருளைப் பொழிவாயாக. உன்னுடைய பரிபூரண அறிவின் ஆதாரத்தின் அடிப்படையில் என்னுடைய இந்தக் காரியம் என்னுடைய மார்க்கம், என்னுடைய வாழ்வாதாரம் மற்றும் என்னுடைய ஈடேற்றத்திற்காக தீங்கு விளைவிப்பதாக இருக்குமானால், என்னை அதிலிருந்தும் அதனை என்னை விட்டும் விலக்கிவிடு, மேலும், எனக்காக எங்கு நன்மை இருக்கின்றதோ அதனை எனக்காக விதித்துவிடு, அதன்பின் என்னை அதனைக்கொண்டு திருப்தியடைபவனாகவும் அதனை ஏற்றுக்கொள்பவனாகவும் ஆக்கிவிடு (புக்ஹாரி)*

**ஸலாதுல் ஹாஜஹ் தொழுகை (ஒன்று தேவைப்படும்போது அதனை அல்லாஹ்விடம் கேட்பதற்காக)**

ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் அபீ அவ்ஃபா (ர) அவர்கள் அறிவிக்கின்றார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் எங்கள் புறமாகச் சென்றார்கள், அப்போது கூறினார்கள்: உங்களில் எவருக்கும் அல்லாஹ்விடமிருந்து எந்த ஒரு தேவையும் இருக்குமானால் அல்லது எந்த ஒரு மனிதரிடமிருந்தும் ஒரு தேவை நிறைவேறவேண்டியது இருக்குமானால், அப்போது அவர் நல்ல விதமாக உதூ செய்துகொண்டு இரண்டு ரகஅத்துகள் நஃபிலான தொழுகையை நிறைவேற்றவேண்டும், அதன்பின் அல்லாஹ்வைத் துதித்தும் அவனைப் புகழ்ந்தும், இறைத்தூதர் ﷺ அவர்கள்மீது ஸலவாத்தையும் ஓதி, அதன்பின் இந்த துஆவை ஓதவேண்டும்.

www.uzairfalahi.com

لَا إِلَهَ إِلَّا اللَّهُ الحَلِيمُ الكَرِيمُ، سُبْحَانَ اللَّهِ رَبِّ العَرْشِ العَظِيمِ، الحَمْدُ لِلَّهِ رَبِّ العَالَمِينَ، أَسْأَلُكَ مُوجِبَاتِ رَحْمَتِكَ، وَعَزَائِمَ مَغْفِرَتِكَ، وَالغَنِيمَةَ مِنْ كُلِّ بِرٍّ، وَالسَّلَامَةَ مِنْ كُلِّ إِثْمٍ، لَا تَدَعْ لِي ذَنْبًا إِلَّا غَفَرْتَهُ، وَلَا هَمًّا إِلَّا فَرَّجْتَهُ، وَلَا حَاجَةً هِيَ لَكَ رِضًا إِلَّا قَضَيْتَهَا يَا أَرْحَمَ الرَّاحِمِينَ

*பொருள்: அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை, அவன் சகித்துக்கொள்பவனும் கருணையாளனுமாயிருக்கின் றான், அவன் பரிசுத்தமானவனும் மகத்தான அர்ஷின் அதிபதியும் இரட்ச கனாகவும் இருக்கின்றான், புகழ் அனைத்தும் அகிலங்களின் இரட்சக னுக்கே உரியது. அல்லாஹ்வே, நான் உன்னிடம் உன்னுடைய கருணை யின் ஆதாரமான நற்காரியங்களைச் செய்யும் பாக்கியத்தினை அளிக்குமா றும் உன்னுடைய பாவமன்னிப்பையும் கோருகின்றேன். உனக்குக் கீழ்ப் படிந்து நற்காரியங்களைச் செய்யும் வாய்ப்பினையும் பாவமான காரியங் களிலிருந்து பாதுகாப்பும் அளிக்கவேண்டும் என்றும் கோருகின்றேன். என்னுடைய பாவங்களை ஒன்று விடாமல் மன்னித்தருள்வாயாக, என்னு டைய மனதில் எந்த ஒரு கவலையும் துக்கமும் இல்லாது நீக்கிவிடுவாயாக, உனக்குப் பிரியமானவற்றில் எனக்கு என்னென்ன தேவைகள் உள்ளனவோ அவற்றைப் பூர்த்தி செய்வாயாக, கருணை புரிவோரில் மிக்கக் கருணை யாளனே அருள்புரிவாயாக.* (திர்மிதி, நசாயி, இப்னு மாஜா).

இந்த துஆவை ஓதியபின் இவ்வுலக மற்றும் மறுமையின் தேவைகளில் எந்த ஒன்றையும் கேட்கவேண்டுமோ அதனைக் கேளுங்கள், நிச்சயமாக அல்லாஹ் எல்லாவற்றின்மீதும் ஆற்றல் படைத்தவனாக இருக்கின்றான், உங்கள் தேவைகளை நிறைவேற்றுவான்.

www.ujaiiahi.com

## **ஸலாதுத் தவ்பஹ் (பாவமன்னிப்புக்கோரும் தொழுகை)**

இறைத் தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

مَا مِنْ عَبْدٍ يُذْنِبُ ذَنْبًا، فَيُحْسِنُ الطُّهُورَ، ثُمَّ يَقُومُ فَيُصَلِّي رَكْعَتَيْنِ، ثُمَّ يَسْتَغْفِرُ اللَّهَ، إِلَّا غَفَرَ اللَّهُ لَهُ

*பொருள்: ஒரு அடியான் ஒரு பாவமான செயல் நிகழ்ந்துவிட்ட நிலையில் நல்ல விதமாக உளூ செய்துகொண்டு இரண்டு ரகஅத்துக்கள் தொழுகையை நிறைவேற்றி அதன்பின் அல்லாஹ் தஆலாவிடம் தன்னுடைய பாவங்க ளுக்காக மன்னிப்புக் கோரினால், அல்லாஹ் தஆலா அவனுடைய பாவங்கள் அனைத்தையும் மன்னித்துவிடுவான்* (அஹ்மத், அஸ்ஹாபுஸ் சுனன், இப்னு ஹிப்பான்).

## ஸலாதுல் குசூஃப் (சூரிய கிரகணத்தின் தொழுகை)

ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் அறிவிக்கின்றார்கள், இறைத்தூதர் ﷺ அவர்களுடைய ஆயுட்காலத்தில் ஒரு முறை சூரிய கிரகணம் ஏற்பட்டது. அப்போது, அவர்கள் ﷺ மஸ்ஜிதுக்குச் சென்றார்கள், தக்பீர் சொல்லி தொழுகையில் நின்றுகொண்டார்கள், மக்களும் அவர்களுக்குப்பின்னால் ஸஃப்புகளை அமைத்துக்கொண்டு நின்றார்கள். அவர்கள் ﷺ நீண்ட நேரம் ஃகிராஅத் ஓதினார்கள்அதன்பின் தக்பீர் கூறி ருகூஉ செய்தார்கள, ஏறத்தாழ ஃகிராஅத் ஓதியது போன்றே நீண்ட நேரம் ருகூஉவில் இருந்தார்கள், அதன்பின் அவர்கள் ﷺ தங்களுடைய தலையை உயர்த்தி எழுந்து நின்று سَمِعَ اللّٰهُ لِمَنْ حَمِدَه رَبَّنَا وَلَكَ الْحَمْدُ என்று கூறி நின்றுகொண்டிருந்தார்கள், அதன்பின், முன்பு ஃகிராஅத் ஓதியது போன்றே நீண்ட நேரம் ஃகிராஅத் ஓதினார்கள், அதன்பின் தக்பீர் கூறி முன்பு செய்ததுபோன்றே ருகூஉ செய் தார்கள், அதன்பின் سَمِعَ اللّٰهُ لِمَنْ حَمِدَه رَبَّنَا وَلَكَ الْحَمْدُ என்று கூறி எழுந்து அதன்பின் சஜ்தா செய்தார்கள், அதனை அடுத்து இரண்டாவது ரகஅத் தையும் முதல் ரகஅத்தைப்போன்றே செய்தார்கள். அவர்கள் ﷺ இரண்டு ரகஅத்துக்களில் நான்கு ஃகியாம், நான்கு ருகூஉ மற்றும் நான்கு சஜ்தாக் களைச் செய்தார்கள். இத்தொழுகை முடிவதற்குள்ளாகவே சூரிய கிரக ணம் முடிந்துவிட்டது. அவர்கள் ﷺ க்ஹுத்பா உரையை நிகழ்த்தினார்கள். முதலில் அல்லாஹ்வைத் துதித்து புகழ்ந்து அதன்பின் கூறினார்கள், சூரிய னும் சந்திரனும் அல்லாஹ்வுடைய இரண்டு அடையாளங்களாகும், அவற் றிற்கு எவருடைய வாழ்க்கை அல்லது மரணத்தின் காரணமாக கிரகணம் ஏற்படுவதில்லை. நீங்கள் அவற்றிற்கு இவ்வாறு (கிரகணம்) ஏற்படுவதைக் கண்டால் அல்லாஹ்வுக்கு அஞ்சி தொழுகையின் புறமாக விரைந்து செல்லுங்கள்.

இந்தத் தொழுகை முஅக்கதஹ்வான சுன்னத்தாகும். சூரியன் அல்லது சந்திர கிரகணம் ஏற்படும்போது இரண்டு ரகஅத்துக்களில் நிறைவேற்றப் படுகின்றது. இரண்டு ரகஅத்துக்களிலும் இரண்டு ஃகியாம், இரண்டு ருகூஉ செய்யப்படும் மற்றும் இது மஸ்ஜிதில் ஜமாஅத்துடன் நிறைவேற் றப்படும். ஃகிராஅத்தை நீட்டுவது விரும்பத்தக்கதாகும். கிரகணம் துவங்கி யதும் அதனைத் துவங்கி கிரகணம் முடிந்துவிடும் வரையிலும் தொழுது கொண்டிருக்கவேண்டும்.

## இஸ்திஸ்ஃகா தொழுகை (மழைக்காக தொழப்படுவது)

இந்தத் தொழுகை முஅக்கதஹ்வான சுன்னத்தாகும். இது மழைக்காக அல்லாஹ்விடம் துஆ கேட்கும் வகையில் நிறைவேற்றப்படுகின்றது. ஒரு

www.uzairfalahi.com

*முறை மக்கள் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் வந்து வறட்சியைப்பற்றி முறையிட்டார்கள். அப்போது அவர்கள் ﷺ மிம்பர்மீது ஏறி அல்லாஹ் வைத் துதித்து அவனைப் புகழ்ந்து தக்பீர் சொல்லி அதன்பின் கூறினார்கள், நீங்கள் வறட்சியைப்பற்றி முறையிட்டுள்ளீர்கள், அல்லாஹ் தஆலா கட்டளையிடுகின்றான், நீங்கள் அல்லாஹ்விடம் மழைக்காக துஆ கேளுங் கள் அவன் உங்களுடைய துஆவை ஏற்றுக்கொள்வான். அதன்பின் அவர் கள் ﷺ கூறினார்ககள்:*

**الْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ الرَّحْمَنِ الرَّحِيمِ مَلِكِ يَوْمِ الدِّينِ، لَا إِلَهَ إِلَّا اللَّهُ، يَفْعَلُ مَا يُرِيدُ، اللَّهُمَّ أَنْتَ اللَّهُ، لَا إِلَهَ إِلَّا أَنْتَ الْغَنِيُّ وَنَحْنُ الْفُقَرَاءُ، أَنْزِلْ عَلَيْنَا الْغَيْثَ، وَاجْعَلْ مَا أَنْزَلْتَ لَنَا قُوَّةً وَبَلَاغًا إِلَى حِينٍ**

*அதன்பின் அவர்கள் ﷺ தன்னுடைய இரு கைகளையும் உயர்த்தி துஆ கேட்டுக்கொண்டிருந்தார்கள், அவர்களுடைய விலாப்புறங்களின் வெண்மைப் பகுதியினை மக்கள் பார்க்கமுடிந்தது. அதன்பின், அவர்கள் தன்னுடைய முதுகை மக்களின் புறமாகத் திருப்பி, போர்வையைக்கொண்டு போர்த்தியவாறு மீண்டும் மக்களை நோக்கித் திரும்பினார்கள், அதன்பின் மிம்பர் மீதிருந்து கீழே இறங்கி இரண்டு ரகஅத்துக்கள் தொழுகையை அவர்களுடன் சேர்ந்து நிறைவேற்றினார்கள். இதற்கிடையில் மேகங்கள் மூடிக்கொண்டன, இடியும் மின்னலும் முழங்கியதோடு அல்லாஹ்வின் கட்டளையால் மழையும் பொழிய ஆரம்பித்தது. அவர்கள் மஸ்ஜிதுக்குத் திரும்பி வந்துவிட்டார்கள், வழியில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. மக்கள் மழையிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக தங்களுடைய வீடுகளை நோக்கி ஓடுவதை இறைத்தூதர் ﷺ அவர்கள் கண்டபோது, அவர்கள் புன்முறுவல் பூத்து சிரிக்கவும் ஆரம்பித்தார்கள், அப்போது அவர்களுடைய கடைவாய்ப் பற்களைப் பாரக்கமுடிந்தது. அவர்கள் ﷺ கூறினார்கள், நான் சாட்சி கூறுகிறேன், அல்லாஹ் எல்லாவற்றின்மீதும் வல்லமை படைத்தவனாக இருக்கின்றான், நான் அவனுடைய அடியானாகவும் தூதராகவும் இருக்கின்றன் (அபூ தாவூத், ஹாகிம்).*

www.lizarfahi.com

*இத்தொழுகை ஈத் பெருநாட்களின் தொழுகைகளைப்போன்று இரண்டு ரகஅத்துக்களைக்கொண்டது, அதில் தக்பீர்கள் சொல்லப்படும், ஜஹ்ரு முறையில் ஃகிராஅத் உரத்தக் குரலில் ஓதப்படும், இதனைக் குடியிருப்புகளிலிருந்து விலகி ஒரு திறந்தவெளியில் நிறைவேற்றவேண்டும். தொழுகைக்குப் பிறகு இமாம் மிம்பருக்குப்பதிலாக தரைமீதே நின்றுகொண்டு க்ஹுத்பா உரை நிகழ்த்தவேண்டும், அதில் அல்லாஹ்வைத் துதித்துப் புகழ்ந்து, மிகவும் அதிகமாகப் பாவமன்னிப்புக்கோரியவாறு மக்களுக்கு*

நல்லுபதேசங்களைக் கூறவேண்டும். அவர்களை வலிமையற்றவர்கள்மீது கொடுமை புரிவதிலிருந்து தடுத்தும், ஏமாற்றும் வேலைகளிலிருந்து விலகியிருக்கவும் தவிர்க்கவும் அறிவுறுத்தவேண்டும். இந்த வறட்சி மற்றும் பஞ்சம் ஆகியவற்றின் பேரிடர் நாம் இறைவனுடைய கட்டளைகளுக்கு மாறு செய்வது மற்றும் பாவச்செயல்களின் காரணமாகவே நம்மீது பாதிப்புக்களை உண்டாக்கியுள்ளன என்பதைப்பற்றி எடுத்துக்கூறி, அவர் அனைவருடைய பாவங்களுக்காகவும் மன்னிப்புக்கோரியவராக மழை பொழிவிக்குமாறு அல்லாஹ்விடம் துஆ கேட்பார். இந்த அறிவுரைகள் வழங்குவதற்கு முன்பாக மக்கள் அனைவரும் பாவமன்னிப்புக் கோரவேண்டும், எவருடைய உரிமைகளைப்பறித்திருந்தாலும் அவற்றை திப்பியளிக்கவும் சண்டை சச்சரவுகளைத் தீர்த்து ஒற்றுமையும் ஒருமைப்பாடும் காத்து சகோதரத்துவம் மற்றும் பரஸ்பர அன்பு மற்றும் நட்புடனான ஒரு சுற்றுச்சூழலை ஏற்படுத்தும் வகையில் முற்பட்டு அதிக அளவிலான நன்மைமையான காரியங்களைச் செய்யவேண்டும், உதாரணமாக, ஸதகா கொடுப்பது, நோன்பு நோற்பது ஆகியன.

மக்கள் இத்தொழுகைக்காக கால்நடையாகச் செல்லவேண்டும் மேலும், பணிவுடனும் தாழ்மையுடனும் செல்லவேண்டும். குழந்தைகள் மற்றும் முதியோர்கள் அனவைரையும் அழைத்துச்செல்லவேண்டும், மூதாட்டிகளும் கலந்துகொள்வது, கால்நடைகள் மற்றும் வளர்ப்புப் பிராணிகளும் உடனிருப்பது சிறந்தது. அல்லாஹ்வின் கருணை அதிகமாகவே பொழியும் வகையில் மிகவும் அதிகமாக மன்றாடி துஆ கேட்கவேண்டும். மக்கள் தங்கள் போர்வைகளை திருப்பிக்கொள்ளவேண்டும், அதாவது, வலது புறத்திலுள்ளதை இடது பிறமாகவும், இடது புறத்திலுள்ளதை வலது புறமாகவும், மேலும் கீழுமாகவும் திருப்பிக்கொள்ளவேண்டும். இதனை ஆண்கள் மட்டும் செய்யவேண்டும், பெண்கள் செய்யத்தேவையில்லை.

www.uzairfalahi.com

### மற்ற நஃபிலான தொழுகைகள்

இவற்றைத்தவிர, மற்ற நஃபிலான தொழுகைகளும் இறைத்தூதர் ﷺ அவர்கள் முக்கியத்துவமளித்து கடைபிடித்து வந்ததாக ஆதாரங்கள் கூறுகின்றன. உதாரணமாக:

1. **தஹிய்யதுல் மஸ்ஜித்**
2. **உதூ செய்தபின் இரண்டு ரகஅத்துக்கள் (தஹிய்யதுல் உதூ)**
3. **பிரயாணத்திற்காகப் புறப்படுவதற்கு முன்பு இரண்டு ரகஅத்துக்கள்**
4. **பிரயாணத்திலிருந்து திரும்பிவந்த பின் இரண்டு ரகஅத்துக்கள்**

### வீடுகளில் நிறைவேற்றவேண்டிய நஃபிலான தொழுகைகள்

இஸ்லாத்தில் தொழுகையை ஜமாஅத்துடன் தொழவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது, அத்துடன் பள்ளிவாசல்களில் அதிக எண்ணிக்கையில் சென்று இபாதத்து செய்யவேண்டும் என்றும் கட்டளையிடப்பட்டுள்ளது. இருப்பினும், அத்துடன், ஒரு முஃமின் தன்னுடைய சுற்றுச்சூழலை அமைதியும் மனநிம்மதியும் உடையதாக ஆக்கிக்கொள்ளவேண்டும் என்பதற்காக, தன்னுடைய வீடுகளையும் தொழுகைகளின் மூலம் அலங்காரமானவையாக ஆக்கவேண்டும் என்றும் கட்டளையிடுகின்றது. இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

**إِذَا قَضَى أَحَدُكُمُ الصَّلَاةَ فِي مَسْجِدِهِ، فَلْيَجْعَلْ لِبَيْتِهِ نَصِيبًا مِنْ صَلَاتِهِ، فَإِنَّ اللهَ جَاعِلٌ فِي بَيْتِهِ مِنْ صَلَاتِهِ خَيْرًا**

*பொருள்: உங்களில் எவரும் மஸ்ஜிதுகளில் தொழுகையை நிறைவேற்றும் போது தன்னுடைய வீட்டிற்கான பங்கை மறந்துவிடாதீர்கள், ஏனெனில், அல்லாஹ் தஆலா தொழுகையின் காரணமாக விடுகளிலும் பரக்கத்து மற்றும் அருளைப் பொழிகின்றான் (முஸ்லிம், அஹ்மத்). மற்றொரு இடத்தில் கூறுகிறார்கள்:*

**جَعلوُا مِنْ صَلَاتِكُمْ فِي بُيُوتِكُمْ، وَلاَ تَتَّخِذُوْهَا قُبُوْراً**

*பொருள்: உங்கள் தொழுகைகளில் சிலவற்றை உங்கள் வீடுகளிலும் தொழுதுகொள்ளுங்கள், உங்கள் இல்லங்களை அடக்கஸ்தலங்களாக ஆக்கிக்கொள்ளாதீர்கள் (புக்ஹாரி, முஸ்லிம்)*

* * *

www.uzairfalahi.com